


## சமத்துவப் பொங்கல் நாளில் ஒன்றிய அரசு தேர்வு வைக்கலாமா?

# பொங்கல் பண்டிகையைச் சிதைப்பதே பா.ஜ.க.வின் நோக்கம்! தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமத்துவப் பொங்கல் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூடு!

**காஞ்சிபுரம், ஜன.14–**

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில், மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஏற்பாட்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, இடைக்கழிநாடு – கப்பிவாக்கம் பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது.**

இந்தப் பொங்கல் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு 5,000 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு, 48 கழகத் தோழர்களுக்கு கலைஞர் நூற்றாண்டு நாணயம், பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை, 200 கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி, 200 விளையாட்டுக் குழுக்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், கழகத் தொண்டர் அணியினருக்கு வீட்டுமனை பட்டாக்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்காக உழைத்த மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களைக் கௌரவித்ததுடன், முரசொலி சந்தாவாக 500 பேர்களுக்குரிய தொகையைப் பெற்றுக் கொண்டார்.

அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், `எதிர்வரும் 2026- சட்டமன்றத் தேர்தலில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட அத்தனை தொகுதிகளிலும் மகத்தான வெற்றியை, கழக அணி பெற்றிடும் வகையில் உழைத்திட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக பொங்கல் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு :-

முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் என் ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் மாவட்டச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்கள் எப்போதாவதுதான் என்னிடத்தில் தேதி கேட்பார்கள். அடிக்கடி கேட்க மாட்டார். ஆனால், எப்போதாவது தேதி கேட்டு வாங்கி விட்டு, பல நிகழ்ச்சிகளை நடத்தி விடுவார். அப்படித்தான் இதற்கு முன்பும் இப்படிப் பல நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்.

### முதல் செயல்வீரர் கூட்டம்!

இங்கு இதே மாவட்டத்தில், இரண்டு முறை பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்தியவர்தான் அண்ணன் சுந்தர் அவர்கள். அதேபோல் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு முதல் செயல்வீரர் கூட்டத்தையும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்தான் அண்ணன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இன்று ஒரே நாளில், 5 ஆயிரம் குடும்பங்களுக்குப் பொங்கல் பரிசு, 48 கழகத் தோழர்களுக்கு கலைஞர் நூற்றாண்டு நாணயம் வழங்குதல், கல்வி ஊக்கத் தொகை வழங்குதல், கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குதல், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்களைக் கௌரவித்தல், முரசொலிக்கு சந்தா வழங்குதல், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், வீட்டு மனை பட்டா வழங்குதல் என இந்த மேடையில் மட்டும் எட்டு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இதற்கு முன்பு இங்கு வரும் வழியில், கழக இளைஞர் அணியின் சார்பாக கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்து விட்டு வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏற்றி வைக்கும் நிகழ்ச்சி என இன்னொரு நிகழ்ச்சி. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக என்னை மகிழ்ச்சியில் தள்ளக்கூடிய எங்களின் இளைஞர் அணிக்கு வளர்ச்சி நிதி என மொத்தம் 11 நிகழ்ச்சிகளை, இன்றைக்கு அண்ணன் சுந்தர் அவர்கள் நடத்தி இருக்கிறார்.

### ஒரே கல், ஒரே மரம்!

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் அடிப்பார்கள் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால், அண்ணன் சுந்தர் அவர்களோ ஒரே கல்லில் ஒரு மரத்தில் உள்ள மொத்த மாங்காய்களையும் அடித்திருக்கிறார் என்று சொல்லலாம். அத்தகைய வல்லமை படைத்தவர்தான் அண்ணன் சுந்தர் அவர்கள். அவருக்கு மீண்டும் அன்பையும், பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பாக நடைபெறுகின்ற இந்த சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்துகொள்வதில் உங்களை எல்லாம் சந்திப்பதில் உங்களின் வாழ்த்துக்களை பெறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இது பொங்கல் நிகழ்ச்சியா, பொங்கல் விழாவா, இல்லை, பொங்கல் மாநாடா என்று கேட்கின்ற அளவிற்கு மிகப்பெரிய பிரம்மாண்டமான நிகழ்ச்சியாக மகிழ்ச்சியான நிகழ்ச்சியாக மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார், அண்ணன் சுந்தர் அவர்கள்.

### பொங்கல் வாழ்த்துகள் !

உங்களை எல்லாம் பார்க்கும் பொழுது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கிறது. முதலில், உங்கள் அத்தனை பேருக்கும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன் உங்கள் அனைவருக்கும் நன்றி சொல்லியாக வேண்டும். ஏனென்றால், சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது இங்கு வந்து பிரச்சாரம் மேற்கொண்டேன். நமது உதயசூரியன் சின்னத்திற்கு நம் வேட்பாளர் செல்வம் அவர்களுக்கு நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, வெற்றிபெற வைக்க வேண்டும் என்று உங்களிடத்தில் நான் வேண்டுகோள் வைத்தேன்.

அப்போது தேர்தலில் தீவிரமாகக் களப்பணியாற்றி சகோதரர் செல்வம் அவர்களைக் கிட்டத்தட்ட 2 லட்சத்து 22 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து, நீங்கள்தான் அவரை டெல்லிக்கு அனுப்பினீர்கள். அதற்கு, இந்த நேரத்தில் என் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மதச்சார்பற்ற கூட்டணி!

இந்தத் தொகுதி மட்டுமல்ல, தமிழ்நாட்டில் 40 க்கு 40 வெற்றிபெற்றது, நம் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிதான். நம் தலைவர் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி. சென்ற ஆண்டு எப்படியாவது, தமிழ்நாட்டில் ஒரு



தொகுதியாவது வெற்றிபெற மாட்டோமா என்று மோடி என்னென்னமோ செய்து பார்த்தார். `மோடி மஸ்தான்' வேலையெல்லாம் செய்தார்.

கன்னியாகுமரிக்கு வந்து விவேகானந்தர் சிலையில் உட்கார்ந்து விட்டார். தியானம் செய்தார். பொங்கல் வைப்பது மாதிரி, புகைப்படம் எல்லாம் போட்டார். ஆனால், நீங்கள் மோடிக்கே பொங்கல் வைத்தீர்கள். அதுதான் தமிழ்நாட்டு மக்கள்.

### சமத்துவப் பொங்கல்!

எனவே, பொங்கல் வாழ்த்தைத் தெரிவிப்பதற்காக மட்டுமல்ல, உங்களுக்கு என் நன்றியையும், அன்பையும் தெரிவிப்பதற்காக தலைவர் அவர்கள் இங்கு என்னை அனுப்பி வைத்திருக்கிறார். இந்த விழாவிற்கு, பெயர் சமத்துவப் பொங்கல் என்று வைத்துள்ளதற்கு நம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்கும், அண்ணன் சுந்தர் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், பொங்கல் மட்டும்தான் சாதி,மதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு பண்டிகை. இந்த விழாவை நடத்துவதற்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்கள் இடைக்கழி நாடு என்ற வரலாற்று சிறப்புமிக்க ஊரை தேர்ந்தெடுத்துள்ளார்.

2,000 ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்தில் எத்தனையோ புலவர்கள் வாழ்ந்தார்கள். அண்ணன் சுந்தர் அவர்களே இங்கு குறிப்பிட்டார்கள். எத்தனையோ ஊர்கள் இருந்திருக்கும். ஆனால், பல புலவர்களின் பெயர்கள் வெளியிலே தெரியாமல் போய்விட்டது. அதேபோல் பல ஊர்களின் பெயர்களும் சங்க கால பாடங்களில் இடம்பெறவில்லை. ஆனால், இந்த `இடைக்கழி நாடு', சங்க இலக்கியத்தில் `நல்லூர்' என்கின்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், இந்த ஊரில் ஒரு சங்க காலப் புலவரும் வாழ்ந்து இருக்கிறார். அவர் பெயர்தான் இடைக்கழிநாடு நல்லூர் நத்தத்தனார். அந்த அளவிற்கு, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இடைக்கழி நாட்டில் நடக்கும் பொங்கல் விழாவில், கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

### பண்டிகையைக் கெடுக்க எண்ணம்!

பொங்கல் என்று சொன்னாலே, தமிழர்களின் பண்டிகை. எந்த மூடநம்பிக்கைகளுக்கும், எந்த கட்டுக் கதைகளுக்கும் இடம் கொடுக்காத பண்டிகை என்றால், அது நம் பொங்கல் பண்டிகைதான். சமத்துவப் பொங்கல் என்று நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்வார். இவ்வளவு சிறப்பான பொங்கல் பண்டிகையை எப்படியாவது கெடுக்க வேண்டும் என்று நாம் கொண்டாட வேண்டும் என்றுதான் ஒன்றிய அரசு தன் தேர்வுகளைச் சரியாக பொங்கல் தினத்தன்று நடத்துகிறார்கள். சென்ற வருடமும் நடத்தினார்கள். நம் முதலமைச்சர் அவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தார்.

இப்படித் தொடர்ந்து நம் பண்டிகைகளை, நம் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைக்க வேண்டும் என்பதுதான் ஒன்றிய பா.ஜ.க அரசின் நோக்கம். அதற்காகவே இங்கு ஒருவரை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்தான் ஆளுநர் ஆர்.என்.ரவி. அவரின் வேலை என்ன? அவர் என்ன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா? ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர். அவரின் பதவிக் காலமும் முடிந்துவிட்டது. ஆனால், நம் தலைவர் வேண்டுகோள் வைத்தார்.

### ஆளுநர் நமக்கு தேவையா?

தயவு செய்து திரு.ஆர்.என்.ரவி அவர்களை மாற்றி விடாதீர்கள். எங்களுடன் சேர்ந்து எங்களுக்காக தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார், ஆர்.என். ரவி அவர்கள் என்று சொன்னார். நம் கோரிக்கையை ஏற்று, ஒன்றிய அரசு இன்னும் அவரை இங்கு வைத்திருக்கிறது. அவரின் வேலை என்ன? நம் முதலமைச்சர், அரசு சார்பில் தயாரித்து கொடுக்கின்ற சட்டமன்ற அறிக்கையை, `ஆளுநரின் உரை' என்று சொல்வார்கள். ஆனால், நம் அரசு, முதலமைச்சர் தயாரித்து கொடுக்கின்ற உரையை படிப்பது மட்டும்தான் அவரின் வேலை. அந்த வேலையையாவது சரியாகப் பார்க்கிறாரா? அவர் பார்க்கின்ற ஒரே வேலை சட்டமன்றத்தில் `வாக்கிங்' போவது மட்டும்தான்.

வருவார்... தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட போகிறோம். அதற்கு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு, சென்று விடுவார். சில ஆண்டுகளுக்கு முன்பு, `தமிழ்நாடு' என்ற பெயரை மாற்ற வேண்டும்' என்று சொன்னார். `தமிழ்நாடு' என்று ஏன் பெயர் வைத்திருக்கிறீர்கள். அதை மாற்றுங்கள்' என்று சொன்னார். தமிழ்த்தாய் வாழ்த்துப் பிடிக்காது, தமிழ்நாடு பிடிக்காது. பெரியார், அண்ணா, கலைஞர், அம்பேத்கர் பெயர்கள் பிடிக்காது. வருவார், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடியவுடன் ஓடிப் போய் விடுவார். இப்படிப்பட்ட ஆளுநர் நமக்கு தேவையா?

### ஆளுநரைக் காட்டுங்கள்!

இதைக் கண்டித்து எதிர்க்கட்சி அ.தி.மு.க. ஒரு கண்டன அறிக்கையாவது வெளியிட்டதா? ஆனால், அதற்கு நேர்மாறாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி என்ன சொல்கிறார் தெரியுமா, பொதுவாக, எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ன பேசுவார்கள், என்ன கோரிக்கை வைப்பார்கள், சட்டமன்றத்தில்? தொலைக்காட்சிகளில் நீங்கள் ஆளும் கட்சியை மட்டும் காட்டுகிறீர்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் பேசுவதைக் கொஞ்சம் காட்டுங்கள் இதைத்தானே கோரிக்கையாக வைக்க வேண்டும். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் நம் எடப்பாடி பழனிச்சாமி நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் பேசும்பொழுது சொல்கிறார். தயவுசெய்து எங்களைக் காட்டுகிறீர்களோ இல்லையோ ஆளுநரைக் காட்டுங்கள். ஆளுநர் வருகிறார், போகிறார் அவரை டிவியில் காட்டவே மாட்டேன் என்கிறீர்கள் என்று ஆளுநருக்கு, வரிந்து கட்டி பேசுகின்ற இயக்கம்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

இதிலிருந்தே தெரிகிறது, இல்லையா? அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது என்று. அதுமட்டுமல்ல, இன்று வரை ரெய்டு போய்க் கொண்டிருக்கிறது. எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் உறவினர் வீட்டில், ஐ.டி. ரெய்டு போய்க் கொண்டிருக்கிறது. நிச்சயமாகச் சொல்கிறேன். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு பேரும் பிரிந்து வந்தார்கள். ஆனால், இந்த சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக, அ.தி.மு.க. - பா.ஜ.க. ஒன்றாகச் சேர்ந்து உங்களிடம் வருவார்கள்.

உங்களுக்கு வேலை இப்போது சுலபம். வேலை சுலபம் என்று நாமெல்லாம் சாதாரணமாக இருந்துவிடக் கூடாது. நமக்கு இன்னும் மொத்தம் 14 மாதங்கள்




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக்கழகம் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது, கடப்பாக்கம் பகுதியில் கழக குடும்பத்தைச் சேர்ந்த ஜா.பாஸ்கரன் - ப.இந்துமதி இணையரின் திருமணத்தை நடத்தி வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.

தொடர்ச்சி ... 10ஆம் பக்கம்